

தமிழ்நாடு அரசு

வாழ்வியல் திறன்கள்
மற்றும்
விழுமியக் கல்வி

8

எட்டாம் வகுப்பு

2025 - 2026

பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

8th_Value Education Module.indd 1 31-03-2026 14:34:17

தமிழ்நாடு அரசு

முதல் பதிப்பு - 2025

நூல் உருவாக்கமும் தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம்
© SCERT 2025

நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழகம்
www.textbooksonline.tn.nic.in

8th_Value Education Module.indd 2 31-03-2026 14:34:18



இந்திய அரசமைப்பு

முகப்புரை

இந்திய மக்களாகிய நாம், இந்திய நாட்டினை இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்,

அதன் குடிமக்கள் அனைவரும்
சமுதாய, பொருளியல், அரசியல், நீதி;
எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை;
சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்;

அவர்கள் அனைவரிடையேயும்
தனி மனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்;

உள்ளார்ந்த உறுதியுடையராய்,
நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.

8th_Value Education Module.indd 3 31-03-2026 14:34:18



அறிமுகம்



படிப்போமா!



கலந்துரையாடல்



சிந்தனைப் பகுதி



தொடர்பணி



உங்களுக்குத் தெரியுமா?

8th_Value Education Module.indd 4 31-03-2026 14:34:18

முகவுரை

அன்பு மாணவச் செல்வங்களே!

அறிவும் திறமையும் மனிதனை வளர்ச்சிக்குத் தூண்டும். அதற்கும் மேலாக உயர் விழுமியங்களுடன் வாழ்தல், ஒருவரை முழு மனிதனாக்கும். ஒரு நல்ல சமூகம் உருவாகவும் அமைதியான வாழ்வு மலரவும் ஒவ்வொரு தனிமனிதனும் உயர் விழுமியங்களுடன் வாழ்தல் முதன்மையான தேவையாகும். இந்த வாழ்வியல் திறன்கள் மற்றும் விழுமியக் கல்வி நூல் உங்களின் கல்விப் பயணத்தில் ஒரு புதிய பரிமாணத்தைச் சேர்க்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டுள்ளது.

வாழ்க்கையின் அறைகூவல்களை எதிர்கொள்ளவும் சரியான முடிவுகளை எடுக்கவும் பிற மனிதர்களுடன் நல்லுறவைப் பேணவும் தேவையான அறநெறிகள், மனிதாபிமானம், சமூகப் பொறுப்புணர்வு, தேசப்பற்று போன்ற உயரிய பண்புகளை நீங்கள் வளர்த்துக்கொள்ள இது ஒரு வாய்ப்பாக அமையும். பாடநூல்களில் உள்ள செய்திகளைத் தாண்டி, அன்றாட வாழ்வியலைப் புரிந்துகொள்ளவும் உங்களைச் சார்ந்துள்ள உலகின் மீது அக்கறையுடன் செயல்படவும் இத்தொகுப்பு வழிகாட்டும்.

"சுடர்விட்டு எரியும் ஒரு விளக்குதான், மற்றொரு விளக்கை ஏற்ற உதவும்" என்பது இரவீந்திரநாத் தாகூரின் கூற்று ஆகும். அவரது கூற்றை மெய்ப்பிக்கும் வகையில், நீங்கள் கற்றுக்கொள்ளப்போவது வெறும் விதிகள் மட்டுமல்ல; அது உங்கள் மனத்தில் ஒரு நேர்மறை மாற்றத்தை விதைத்து, உங்களை ஒரு சிறந்த மனிதராக, பொறுப்புள்ள குடிமகனாக உருவாக்குவதற்கான அடித்தளமாகும். இந்த விழுமியங்கள் உங்கள் வாழ்க்கைப் பாதையை ஒளிமயமாக்கி, உங்களையும் நீங்கள் சார்ந்துள்ள உலகத்தையும் மெருகேற்றும் என்பதில் ஐயமில்லை.

இக்கட்டகத்தில் வாழ்வியல் திறன்கள், விழுமியங்கள், பாலினச் சமத்துவம், சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, சமூக ஊடகத்தின் முறையான பயன்பாடு, சுகாதாரமான பழக்கவழக்கங்கள், ஆரோக்கியமான உணவுப் பழக்கங்கள்,நேர்மறை எண்ணங்கள், போதைப் பொருள்களின் தீமைகள் பற்றிய விழிப்புணர்வு ஆகியவற்றை வலியுறுத்தும் வகையிலான கருத்துகள் அனைத்தும் கதை, உரையாடல், கடிதம் மற்றும் உண்மை நிகழ்வுகளாக விரிவாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

வாருங்கள்! இந்த மதிப்புமிகு பயணத்தில் இணைந்து, சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவோம்!

8th_Value Education Module.indd 5 31-03-2026 14:34:18

பொருளடக்கம்

வ. எண்	தலைப்பு	பக்க எண்
1	பெரியோரை மதித்தல்	1
2	பிற பண்பாட்டு விழுமியங்களைப் பாராட்டுதல்	4
3	மனிதாபிமானம்	7
4	பசுமையான நகரமே, வளமான நகரம்	10
5	அறிவைத் தேடுதல்	14
6	உழைப்புக்கு உரிய மரியாதை	18
7	குழந்தை உரிமை	20
8	சிந்தனை – செயல் – வெற்றி	23
9	விழித்திரு!	26
10	கொடைச் சிந்தனை	29

8th_Value Education Module.indd 6 31-03-2026 14:34:18

1 பெரியோரை மதித்தல்

மூத்தோர் சொல்லும் முது நெல்லிக் கனியும்
முன்னே கசக்கும் பின்னே இனிக்கும்.

அனைவரையும் மதிப்பதுதான் கல்வியறிவு பெற்ற சமுதாயத்தின் அடையாளமாகும். நம்முடைய பண்பாட்டில், மூத்தவர்களை மதிப்பது ஓர் அடிப்படை அறம். அவர்கள் வெறும் வயதானவர்கள் மட்டுமல்லர், வாழ்க்கையின் அனுபவங்களைச் சுமந்திருக்கும் ஞானக்கருவூலங்கள். அவர்களது அறிவுரையும் ஆசியும் நமக்கு என்றும் வழிகாட்டியாக இருக்கும். அவர்களின் வழிகாட்டுதல், ஒரு கலங்கரை விளக்கம் போன்றது. பெரியோரை மதிப்பதன் வாயிலாக நாம் நம்முடைய ஆளுமைப் பண்பை வளர்த்து, பிறரது நன்மதிப்பையும் பெறுகிறோம். இது அனைவராலும் பின்பற்றப்பட வேண்டிய ஓர் உன்னதமான விழுமியம் ஆகும்.

மதுரையில் ஒரு பரபரப்பான சாலையில் ராமு என்ற இளைஞன் தனது இருசக்கர வாகனத்தில் வேகமாகச் சென்று கொண்டிருந்தான். அவனுக்கு அலுவலகத்தில் முக்கியமான வேலை இருந்தது. செல்லும் வழியில், ஒரு வயதான தாத்தா மெதுவாகச் சாலையைக் கடந்துகொண்டிருந்ததைக் கண்டான்.





"என்ன இவரு... இப்படி மெதுவா போறாரு?" என்று முணுமுணுத்தபடி, பொறுமையின்றி சிக்னலுக்காக நின்றுகொண்டிருந்தான். சிலர் அந்தத் தாத்தாவை விரைந்து சாலையைக்கடக்கஅவசரப்படுத்தினர்.தாத்தா கொஞ்சம் தடுமாறினார். அப்போது, அந்தப் பக்கமாக வந்த கார் ஓட்டுநர் ஒருவர் வண்டியை நிறுத்திவிட்டு, இறங்கி வந்து அந்தத்

8th_Value Education Module.indd 1 31-03-2026 14:34:19

தாத்தாவின் கையைப் பிடித்து மெதுவாகச் சாலையைக் கடக்க உதவினார். ராமுவும் மற்றவர்களும் அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

தாத்தா சாலையைக் கடந்ததும், அந்தக் கார் ஓட்டுநர் திரும்பிச் சென்று தனது வண்டியில் ஏறினார். ராமுவுக்கு அந்தக் கார் ஓட்டுநரைப் பார்க்க வேண்டும் போல் இருந்தது. உடனே அவன் எட்டிப் பார்த்தான். அவர் வேறு யாருமல்லர், ராமு பணிபுரியும் அலுவலகத்தின் மேலாளர்தான்!



ராமுவுக்கு மிகவும் கவலையாய் இருந்தது. மிகஉயர்ந்த பதவியில் இருக்கும் தன் மேலாளர் அந்த முதியவருக்கு உதவி புரிந்ததையும் தன்னுடைய செயலையும் ஒப்பிட்டு, வெட்கித் தலைகுனிந்தான். தன் மேலாளர் ஒரு முதியவரிடம் காட்டிய மரியாதையும் பொறுமையும் அவன் மனத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.



அன்று அலுவலகம் சென்றதும், ராமுவின் மனத்தில் அந்த நிகழ்வுதான் ஓடிக் கொண்டிருந்தது. சில நாள்களுக்குப் பிறகு மாலை வீடுதிரும்ப அதே சாலைவழியாக வந்தபோது தன் மேலாளர் உதவிய தாத்தாவை மீண்டும் பார்த்தான். இந்த முறை, ராமு தனது வண்டியை ஓரமாகநிறுத்திவிட்டு, தாத்தாவிடம் சென்று "மன்னிக்கணும் தாத்தா... அன்றைக்கு காலையில நான் கொஞ்சம் அவசரத்துல இருந்தேன். உங்களுக்கு உதவி செய்யாம போனது எனது தப்புதான்" என்று பணிவாகக் கூறினான்.

அந்தத் தாத்தா ராமுவை ஆச்சரியத்துடன் பார்த்தார். பிறகு புன்னகைத்து, "பரவாயில்லப்பா... அவசரம் எல்லாருக்கும் இருக்கும். ஆனா, வயசானவங்கள கொஞ்சம் கவனிச்சுப் போனா நல்லா இருக்கும்," என்றார்.



அன்று முதல், ராமு முதியோர்களைப் பார்க்கும் விதமே மாறிவிட்டது. பொது இடங்களிலோ,

8th_Value Education Module.indd 2 31-03-2026 14:34:20



சாலையிலோ முதியவர்களைப் பார்த்தால், தவறாமல் அவர்களுக்கு உதவி செய்வான். அன்று அவன் தன்மேலாளரிடம் இருந்து கற்றுக்கொண்ட பாடம், அவன் வாழ்க்கையில் ஒரு முக்கியமான மாற்றத்தை ஏற்படுத்தியது. முதியோர்கள் அனுபவத்தின் களஞ்சியம், அவர்கள் கவனிக்கப்பட வேண்டியவர்கள் என்பதை ராமு ஆழமாக உணர்ந்துகொண்டான்.

நாம் முதியோர்களை மதிக்க வேண்டியதன் அவசியம் என்ன?

முதியோர்களின் அனுபவங்களிலிருந்து இளைஞர்கள் என்ன கற்றுக்கொள்ள முடியும்? தலைமுறை இடைவெளியை நாம் எப்படிக் குறைக்கலாம்?

முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாக்க அரசு மேற்கொண்டுள்ள திட்டங்கள் பற்றிய தகவல்களைச் சேகரித்து வருக.

விழுமியங்கள்

- முதியோருக்கு மரியாதை அளித்தல்
- அன்பு காட்டுதல்
- நன்றி பாராட்டுதல்/கூறுதல்
- பிறர் நலனில் அக்கறை கொள்ளுதல்

வாழ்வியல் திறன்கள்

- பயனுள்ள தகவல் தொடர்புத்திறன்
- முடிவெடுத்தல்

தம்மின் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாம் தலை – குறள் (444)

இன்னா பெரியோர்க்குத் தீய செயல் – கபிலர், இன்னா நாற்பது (26)

8th_Value Education Module.indd 3 31-03-2026 14:34:21

2 பிற பண்பாட்டு விழுமியங்களைப் பாராட்டுதல்

"வேற்றுமையில் ஒற்றுமை காண்போம்."

உலகில் பலவிதமான கலாச்சாரங்கள் உள்ளன. ஒவ்வொன்றுக்கும் தனித்துவமான விழுமியங்கள், பழக்கவழக்கங்கள் மற்றும் நம்பிக்கைகள் உள்ளன. நம்முடைய கலாச்சாரத்தை மட்டும் உயர்வாக நினைக்காமல், பிற கலாச்சாரங்களில் உள்ள உயரிய கருத்துகளையும் அவற்றில் பொதிந்துள்ள அந்த மண்ணின் வரலாறு, கலை மற்றும் வாழ்க்கை முறையை மதிக்கவும் பாராட்டவும் கற்றுக்கொள்வது மிகவும் அவசியம். நாம் நம்முடைய கலாச்சாரத்தோடு மற்றவர்களின் கலாச்சாரத்தையும் மதிக்கும்போதுதான் உண்மையான மனிதநேயம் மலர்கிறது.



தஞ்சையில் ஒரு பாரம்பரியமான குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவள் தென்றல். சிறுவயது முதலே, பொங்கல், தீபாவளி, கார்த்திகை தீபம், ரம்ஜான், கிறிஸ்துமஸ் போன்ற பண்டிகைகளின் முக்கியத்துவத்தையும், நமது கலைகளான பரதம், கர்நாடக சங்கீதம் ஆகியவற்றின் சிறப்பையும் உணர்ந்து வளர்ந்தாள். தனது கலாச்சாரத்தின்மீது அவளுக்கு அளவுகடந்த பற்று இருந்தது. கல்லூரியில் படிக்கும்போது, இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த நண்பர்கள் அவளுக்கு அறிமுகமாயினர். அவர்களில் வட இந்தியாவைச் சேர்ந்த ரியா என்பவரும் ஒருவர். ஆரம்பத்தில், தென்றலும் ரியாவும் அவரவர் கலாச்சாரத்தைப் பற்றி மட்டுமே பேசிக்கொண்டிருந்தனர்.



ஒருமுறை, ரியா தனது ஊரில் கொண்டாடப்படும் ஹோலி பண்டிகையின் வண்ணமயமான கொண்டாட்டங்கள், ஓடிசி

8th_Value Education Module.indd 4 31-03-2026 14:34:21

நடனம் போன்றவை குறித்துத் தென்றலிடம் விவரித்தாள். தென்றலுக்கு அந்தப் பண்டிகை மிகவும் புதியதாகவும், ஆர்வமூட்டுவதாகவும் இருந்தது.



அதேபோல, தென்றல் ஒருமுறை தனது குடும்பத்துடன் தஞ்சாவூருக்குச் சென்றிருந்தபோது, அங்குப் பார்த்த தஞ்சை பெரிய கோயிலையும் அதன் கட்டடக் கலையின் சிறப்பையும் ரியாவுக்கு விளக்கினாள். மேலும், பரதநாட்டியக் கலைஞர்களின் அபிநயத்தையும் தென்றல் கூறக் கேட்ட ரியா வியந்துபோனாள். அவளுக்குத் தமிழ் கலாச்சாரத்தின் பழமையும் பெருமையும் புரிந்தது.

ஒரு நாள், கல்லூரியில் கலை, பண்பாட்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தென்றல் பரதநாட்டியம் ஆடவும், ரியா தனது மாநிலத்தின் நாட்டுப்புற நடனத்தை ஆடவும் முடிவு செய்திருந்தனர். இருவரும் தங்களது பாரம்பரிய நடனங்களை மற்றவர்களுக்குப் புரியும் வகையில் மிக எளிமையான நடையில் ஆடினர். பயிற்சி நேரங்களில், ரியாவின் நடன அசைவுகளைத் தென்றல் ஆர்வத்துடன் கவனித்தாள். அதேபோல், தென்றலின் முகபாவனைகளையும், ஹஸ்த முத்திரைகளையும் ரியா கண் சிமிட்டாமல் பார்த்துப் பாராட்டினாள்.



கலாச்சார விழாவில், தென்றலின் பரதநாட்டியம் தமிழர்களின் பண்பாட்டையும் ரியாவின் துடிப்பான ஒடிசி நடனம் வட இந்தியக் கலையின் பாரம்பரியத்தையும் பிரதிபலித்தன. இருவரது நடனமும் அனைவராலும் பெரிதும் பாராட்டப்பட்டது.

அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு, தென்றலும் ரியாவும் மட்டுமல்ல, பிற நண்பர்களும் பல்வேறு கலாச்சாரங்களைப் பற்றிய செய்திகளை ஆர்வமுடன் பகிர்ந்துகொண்டனர். ஒவ்வொருவரின் தனித்துவமான உணவுப் பழக்கவழக்கங்கள், உடை உடுத்தும் முறை, பண்டிகைகள் கொண்டாடும் விதம் போன்றவற்றை மதிக்கத் தொடங்கினர்.

8th_Value Education Module.indd 5 31-03-2026 14:34:21

தனது கலாச்சாரத்தின் மீதுள்ள பற்று எவ்வளவு முக்கியமோ, அதே அளவு மற்றவர்களின் கலாச்சாரத்தை மதிப்பதும், பாராட்டுவதும் முக்கியம் என்று அனைத்து மாணவர்களும் உணர்ந்துகொண்டனர். ஒவ்வொரு கலாச்சாரத்திலும் உள்ள அழகையும் விழுமியங்களையும் நாம் மதிக்கத் தொடங்கும் போது, உலகம் இன்னும் பண்படும்.



உங்கள் கலாச்சாரத்தில் நீங்கள் மிகவும் மதித்துப் பாராட்டும் சிறப்புகள் யாவை? பிற கலாச்சாரங்களில் உள்ள எந்தெந்தக் கூறுகள் உங்களைக் கவர்கின்றன? ஏன்?



பிற கலாச்சாரப் பாரம்பரியங்களைப் போற்றுதலின் அவசியம்.



"கலாச்சாரக் கண்காட்சி" ஏற்பாடு செய்தல்:
ஒவ்வொருவரும் தாங்கள் விரும்பும் பொருள்கள், படங்கள், இசைக்கருவி, உணவுப் பொருள்களைக் கொண்டு ஒரு கலாச்சாரக் கண்காட்சியை நடத்தவும்

விழுமியங்கள்

- ஒற்றுமை
- பிறர் பண்பாட்டை மதித்தல்
- சட்டத்தின் முன் அனைவரும் சமம்.
- சமமான வாய்ப்புகளை வழங்குதல்.

வாழ்வியல் திறன்கள்

- பயனுள்ள தகவல் தொடர்பு
- தன்னை அறிதல்

வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால் – அதில்
மானுடர் வேற்றுமையில்லை
எண்ணங்கள் செய்கைகள் எல்லாம் –இங்கு
யாவருக்கும் ஒன்றெனக் கண்டீர் **–பாரதியார்**

8th_Value Education Module.indd 6 31-03-2026 14:34:21

3 மனிதாபிமானம்

யாதும் ஊரே யாவரும் கேளிர்
– கணியன் பூங்குன்றனார்

ஒரு குடும்பத்தில் ஒற்றுமை இருந்தால் அந்தக் குடும்பம் வலிமையாக இருக்கும். அதேபோல ஒரு நாட்டில் தேசிய ஒற்றுமை நிலவினால் அந்த நாடு வலிமையாகவும் வளமாகவும் இருக்கும். தேசிய ஒற்றுமை என்பது ஒரு நாட்டில் வாழும் மக்கள் தங்களுக்குள் இருக்கும் மொழி, இனம், மதம், கலாச்சாரம், பண்பாடு போன்றவற்றில் உள்ள பல்வேறு வேறுபாடுகளை மறந்து, "நாம் அனைவரும் இந்தியர்கள்" என்ற ஒருமித்த உணர்வுடன் இணைந்து வாழ்வதாகும். இத்தன்மை ஒருவரை ஒருவர் மதித்து, ஒருவருக்கொருவர் உதவி செய்து, நாட்டின் முன்னேற்றத்திற்காக ஒன்றிணைந்து செயல்படுவதைக் குறிக்கிறது.

அன்புள்ள தீரனுக்கு,

நான் இங்கே நலமாக இருக்கிறேன். நீ எப்படி இருக்கிறாய்? சமீபத்தில் வயநாட்டில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணப் பொருள்கள் திரட்டினாய் எனக் கேள்விப்பட்டேன். உன் பெற்றோர்களின் உதவியுடன் நீ செய்த செயல்கள் மிகவும் வியக்கத்தக்கவை. உனக்கு எனது மனமார்ந்த பாராட்டுகள்! உன்னை நினைத்துப் பெருமிதம் கொள்கிறேன். இந்த இக்கட்டான சூழ்நிலையில் நீ காட்டிய மனிதாபிமானமும் பிறருக்கு உதவும் நல்ல எண்ணமும் உண்மையிலேயே போற்றுதலுக்குரியது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உணவு, உடை, மருந்து போன்ற அத்தியாவசியப் பொருள்களைத் திரட்டுவதற்கு நீ மேற்கொண்ட முயற்சிகள் பாராட்டுக்குரியவை. உன்னுடைய அயராத உழைப்பும் அர்ப்பணிப்பும் பலரது துயரத்தைத் துடைத்தன. நீ தனி ஒருவனாகக் களத்தில் இறங்கி, பல தன்னார்வலர்களையும் நன்கொடையாளர்களையும்



8th_Value Education Module.indd 7 31-03-2026 14:34:22



ஒருங்கிணைத்தது மிகவும் வியக்கத்தக்கது. உன்னைப் போன்ற இளைஞர்கள் இருக்கும் வரை, இந்தச் சமூகத்திற்கு எவ்வித இடர்ப்பாடுகள் ஏற்பட்டாலும் அவற்றை நாம் எதிர் கொள்ளலாம். நீ நிவாரணப் பொருள்களை மட்டும் திரட்டியதோடு மனிதநேயத்தையும், கருணையையும் விதைத்திருக்கிறாய். வெவ்வேறு மாநிலங்களில், வெவ்வேறு மொழி பேசிக்கொண்டு இருப்பினும் நாம் அனைவரும் இந்தியர் என்ற ஒருமைப்பாட்டிற்கு வலுசேர்த்து இருக்கிறாய்.



இது போன்ற சமூகப் பணிகளில் நீ தொடர்ந்து ஈடுபட வேண்டும் என்று நான் விரும்புகிறேன். உனது எதிர்கால முயற்சிகள் வெற்றிபெற எனது வாழ்த்துகள்.

அன்புடன்,

(கோ. வளவன்).

இந்தியாவில் பல்வேறு இயற்கைப் பேரிடர்களால் ஏற்பட்ட பாதிப்புகளை எவ்வாறு தடுத்திருக்கலாம்?

வயநாடு நிலச்சரிவுக்கு முன்





8th_Value Education Module.indd 8 31-03-2026 14:34:22

வயநாடு நிலச்சரிவுக்கு பின்





வயநாட்டில் ஏற்பட்ட நிலச்சரிவுக்கு என்ன காரணம்? அதை எப்படித் தடுத்திருக்கலாம்?

புயல், வெள்ளப்பெருக்கு, நிலச்சரிவு போன்ற இயற்கைப் பேரழிவுகள் ஏற்படும்போது பாதிக்கப்படுவோருக்கு எந்தெந்த வழிகளில் உங்களால் உதவ முடியும்?

உங்கள் ஊரில் உள்ள இராணுவ வீரர்கள் அல்லது காவல் அதிகாரிகளிடம் நேர்காணல் ஒன்றினை நடத்துக. பேரிடர்க் காலங்களில் அவர்கள் எவ்வாறு செயல்படுகின்றனர் என்பது குறித்துத் தகவல் சேகரிக்க.

விழுமியங்கள்

- பிறருக்கு உதவுதல்
- பொதுநலம் பேணுதல்
- தொண்டுள்ளம்
- தேசிய ஒற்றுமை

வாழ்வியல் திறன்கள்

- பிறர் நிலையில் தன்னை வைத்துப் பார்த்தல்
- பிரச்சினைக்குத் தீர்வு காணுதல்
- முடிவெடுத்தல்
- பயனுள்ள தகவல் தொடர்பு

பொன்னொளிர் பாரதநா டெங்கள் நாடே
போற்றுவம் இஃதை எமக்கில்லை ஈடே **– பாரதியார்**

8th_Value Education Module.indd 9 31-03-2026 14:34:22

4 பசுமையான நகரமே, வளமான நகரம்

"இயற்கையை நேசிப்போம்; மரங்களால் சுவாசிப்போம்."



சென்னை மாநகரம், தென்னிந்தியாவின் முக்கியமான நகரங்களில் ஒன்று. அதன் வளமான கலாச்சாரம், வரலாற்றுப் பெருமை மற்றும் தொழில் வளர்ச்சியால் எப்போதும் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால், இந்த நவீனத்துவத்தின் வேகத்தில், நாம் சில நேரங்களில் இயற்கையின் அமைதியையும் பசுமையின் அருமையையும் மறந்துவிடுகிறோம். எங்குத் திரும்பினாலும் உயர்ந்த கட்டடங்கள், நெரிசலான சாலைகள், வாகனங்களின் புகை என ஒரு கான்கிரீட் காடாக மாறிக்கொண்டிருக்கும் இந்த நகர்ப்புறத்தில், ஒரு சிறிய மரத்தின் நிழலும், ஒரு பறவையின் கீச்சொலியும் கூட மனத்திற்கு சாந்தத்தையும் நிம்மதியையும் அளிக்கும்.

நகர்ப்புற வனவியல் என்பது வெறும் அலங்காரத் தோட்டங்கள் அமைப்பது மட்டுமல்ல. இது நமது நகரங்களின் உயிர்நாடி. மரங்கள் நமக்குச் சுத்தமான காற்றை வழங்குகின்றன. நிழல் தருவதுடன் வெப்பநிலையைச் சமநிலையில் வைக்கவும் உதவுகின்றன. மேலும், பலவிதமான உயிரினங்களுக்கு வாழ்விடமாகவும் திகழ்கின்றன. ஆரோக்கியமான நகர்ப்புறச் சூழலுக்குப் பசுமை எவ்வளவு முக்கியம் என்பதை நாம் உணர வேண்டும்.

சில நேரங்களில், ஒரு தனிநபரின் ஆழ்ந்த கவலையும் சிறிய முயற்சியும் கூட பெரிய மாற்றத்திற்கான விதையாக அமைகிறது. அவர்கள் தங்களது சுற்றுப்புறத்தைப் பசுமையாக்க எடுக்கும் ஒவ்வொரு சிறு முயற்சியும், நாளடைவில் பெரிய வனமாக உருவெடுக்கக்கூடும். இது, வெறும் சுற்றுச்சூழலை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல், அந்தப் பகுதியில் வசிக்கும் மக்களின் மன நலனையும் மேம்படுத்துகிறது.

8th_Value Education Module.indd 10 31-03-2026 14:34:22

சென்னையின் ஒரு மையப்பகுதியில், எப்போது பார்த்தாலும் வாகனப் புகையும் இரைச்சலும் நிறைந்து இருந்தது. அங்கு வசித்த மூதாட்டி ராணிஅம்மாள் அந்தப் பகுதி பசுமையாக இல்லாதது கண்டு மிகவும் வருந்தினார். தனது இளமைக்காலத்தில் அந்தப் பகுதியில் இருந்த மரங்களையும் பறவைகளின் ஒலியையும் அவர் அடிக்கடி நினைவுகூர்வார்.





ஒரு நாள், ராணி அம்மாள் தனது வீட்டுக்கு முன் சில பூச்செடிகளை நட்டார். அக்கம்பக்கத்தினர் அதைப் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால், ராணி அம்மாள் தினமும் அவற்றை ஆசையுடன் நீரூற்றிப் பராமரித்து வந்தார். சில மாதங்களில் அந்தச் செடிகள் பூக்கத் தொடங்கின. அந்தப் பகுதியில் ஒரு பசுமையான மாற்றம் தெரிந்தது.

அப்போதுதான் ராணிஅம்மாளுக்கு ஒரு யோசனை தோன்றியது. அவர் தனது அக்கம் பக்கத்து வீடுகளில் வசிப்பவர்களிடம் சென்று மரக்கன்றுகள் நடுதலின் முக்கியத்துவத்தைப் பற்றிப் பேசினார். முதலில் சிலர் தயங்கினாலும், ராணி அம்மாளின் விடாமுயற்சியையும், அவரது அன்பான வேண்டுகோளையும் அவர்களால் மறுக்க இயலவில்லை.

ஒன்றிரண்டு பேர் தங்கள் வீட்டுக்கு முன் சிறிய மரக்கன்றுகளை நட்டார்கள். ராணிஅம்மாள் அவர்களுக்குத் தேவையான உதவிகளையும் ஆலோசனைகளையும் தோட்டக்கலை நிபுணர்கள் உதவியுடன் வழங்கினார். மெல்ல மெல்ல அந்தப் பகுதியில் மரக்கன்றுகள் நடுவது ஒரு சிறிய இயக்கமாகவே மாறியது.



8th_Value Education Module.indd 11 31-03-2026 14:34:24

இளைஞர்கள் சிலர் ஒன்றிணைந்து, அந்தப் பகுதியில் இருந்த ஒரு தரிசு நிலத்தில் மரக்கன்றுகளை நடத் தொடங்கினர். நகராட்சி அதிகாரிகளும் அவர்களின் முயற்சியைப் பார்த்து சில உதவிகளைச் செய்தனர். குறுகிய காலத்தில் அந்தத் தரிசு நிலத்தில் ஒரு சோலை உருவாகியது.





இப்போது அந்தப் பகுதியில் வாகனப் புகையின் நெடி குறைந்து, பறவைகளின் கீச்சொலிகள் கேட்கத் தொடங்கின. கோடைக்காலத்தில் அந்த மரங்கள் மக்களுக்கு நிழல் கொடுத்தன. அந்தப் பகுதியின் வெப்பநிலையும் வெகுவாகக் குறைந்தது.

அந்தப் பகுதியில் இப்போது குழந்தைகள் மரங்களின் நிழல்களில் விளையாடுகிறார்கள், பெரியவர்கள் நிம்மதியாக அமர்ந்து பேசுகிறார்கள். ராணிஅம்மாள் மகிழ்ச்சியில் ஆனந்தக் கண்ணீர் வடித்தார். ஒரு தனி நபரின் சிறிய முயற்சி கூட எவ்வளவு பெரியமாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்பதை அவர் நிரூபித்துக் காட்டினார்.

ஒரு நாள், அந்தப் பகுதிக்கு வந்த ஓர் அரசு அலுவலர், அந்த மாற்றத்தைப் பார்த்து ஆச்சரியப்பட்டார். ராணிஅம்மாளையும், அந்த இளைஞர்களையும் அழைத்து மனதாரப் பாராட்டினார். மேலும், நகரின் பிற பகுதிகளிலும் இது போன்ற நகர்ப்புற வனங்களை உருவாக்க அரசு திட்டமிட்டு வருவதாகக் கூறினார்.



8th_Value Education Module.indd 12 31-03-2026 14:34:26



நகர்ப்புற வனங்களை உருவாக்குவதில் இடப்பற்றாக்குறை, நீர் பற்றாக்குறை போன்ற பிரச்சினைகளை நாம் எப்படிச் சமாளிக்கலாம்?

நகர்ப்புற வனங்களை உருவாக்குவதில் உள்ள சவால்கள் என்னென்ன?

அரசாங்கம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் நகர்ப்புற வனவியலை மேம்படுத்த, என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளன என்பதைப் பெரியோர்களிடம் கேட்டுத் தகவல் சேகரிக்கவும்.

விழுமியங்கள்

- சமூகப் பொறுப்புணர்வு
- தொலைநோக்குப் பார்வை

வாழ்வியல் திறன்கள்

- முடிவடுத்தல்
- பயனுள்ள தகவல் தொடர்பு
- கூர் சிந்தனை

"பசுமையான பூமியே பல்லுயிர்ப் பாதுகாப்பின் ஆதாரம்"

8th_Value Education Module.indd 13 31-03-2026 14:34:26

5 அறிவைத் தேடுதல்

"அறிவைத்தேடி ஓடுங்கள்; நாளைய வரலாறு உங்கள் நிழலாக வரும்."

அறிவைப் பெருக்குவதில் வயதோ இடமோ காலமோ சூழலோ எவற்றையும் பொருட்படுத்தாமல் தொடர்ந்து முயற்சி செய்துகொண்டே இருக்கவேண்டும். எல்லையில்லா வானைப்போன்று நமது அறிவை விரிவாக்கம் செய்ய ஒவ்வொரு நாளும் செயல்பட வேண்டும். 'அறிவு அற்றம் காக்கும் கருவி' என்பார் திருவள்ளுவர். எதிரிகளிடமிருந்தும் கூட இதனை நாம் கற்றுக்கொள்ளலாம்.

தமிழாசிரியர் வகுப்பிற்குள் நுழைந்தார். மாணவர்களின் முகத்தில் ஒளி வட்டங்கள் தெரிந்தன. "மாணவர்களே! இன்றைக்கு என்ன நாள்?" எனக் கேட்டார். "ஏப்ரல் 23 உலகப் புத்தக தினம்" என்றான் மருதன். "ஆஹா! சிறப்பு மருதன். சரி, நேற்று என்ன கூறியிருந்தேன்?" என்று ஆசிரியர் வினவினார். "புத்தகத் திருவிழாவிற்குச் செல்லலாம் எனக் கூறியிருந்தீர்கள்" என்றனர் மாணவர்கள் "சரிசரி, தேவையான பொருள்களை எடுத்துக்கொண்டு கிளம்புங்கள்" என்றார் ஆசிரியர். மாணவர்களும் அவரவர் பைகளை எடுத்துக்கொண்டு பேருந்தில் பயணிக்கத் தயாராகினர். ஆசிரியர், மாணவர்களின் பெயர்களை வாசித்து அவர்களது இருப்பையும் உறுதிப்படுத்தினார்.



பேருந்தில் செல்லும்பொழுதே பல தகவல்களைக் கூறிக்கொண்டே வந்தார். இருபது நிமிடப் பயணத்திற்குப் பிறகு, பேருந்து புத்தகத் திருவிழா நடைபெறும் இடம் வந்தது. மாணவர்கள் மிகவும் ஆர்வமாய்க் கீழே இறங்கினர். ஆசிரியர் மீண்டும் பெயர்களை வாசித்து, நுழைவுச்சீட்டு பெற்று, அனைவரையும் வரிசையில் அழைத்துச் சென்றார். மாணவர்கள், ஒவ்வொரு புத்தகக் கடையையும் ஆர்வமுடனும் மகிழ்வுடனும் பார்த்தனர்.

8th_Value Education Module.indd 14 31-03-2026 14:34:27



மிதிலன், "அம்மா, நீங்கள் சென்றவகுப்பில் கட்டுரை எழுதச்சொன்ன தலைப்பிற்கான புத்தகம் இதோ இங்கிருக்கிறது பாருங்கள்!" என்றான். அதைக் கேட்டுப் புன்னகைத்த ஆசிரியர், ஒவ்வொரு புத்தகக்கடையிலும் உள்ள புத்தகங்களைப் பற்றி விளக்கிக்கொண்டே வந்தார். அப்பொழுது சித்திரன், "அம்மா, இங்கு எவ்வளவு புத்தகங்கள் இருக்கும், இவற்றைப் படித்திட எவ்வளவு காலம் ஆகும்?" என்ற கேள்வியைக் கேட்டதும் ஆசிரியர் உள்ளுக்குள் மகிழ்ந்தார்.

"கடலெனப் பரந்துகிடக்கும் புத்தகங்கள் எல்லாவற்றையும் படிக்க நம் வாழ்நாள் போதாது. உங்களுக்கு ஆர்வமுள்ள புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து வாசிக்கலாம்" என ஆசிரியர் கூறிக்கொண்டு இருக்கும்போதே, புத்தகத் திருவிழாவின் அன்றைய சிறப்புவிருந்தினர், "இவ்வளவு சிறப்பு வாய்ந்தவர்தான் டார்வின்" என்று தமது பேச்சை முடிப்பது கேட்டது. இதனைக் கவனித்த மருதன், "அம்மா, டார்வின் எத்தகைய சிறப்பு வாய்ந்தவர்?" எனக் கேட்டான். "மருதன், உனது கையில் என்ன புத்தகம் உள்ளது? பார்" என்றார். மருதனின் கையில் 'டார்வின்' என்று தலைப்பிட்ட புத்தகம் இருந்தது. "அதை வாங்கிக்கொள். படித்துவிட்டு வந்து நாளை வகுப்பில் கூறு" என்றார் ஆசிரியர்.



மாணவர்கள் அனைவரும் தங்களுக்குப் பிடித்த புத்தகங்களை வாங்கிய பிறகு அவர்களை அழைத்துக்கொண்டு ஆசிரியர் பள்ளிக்குத் திரும்பினார்.

மறுநாள் காலை தமிழாசிரியரின் பாடவேளை வந்தது. ஆசிரியர் வரும்போது, வகுப்பறையில் மாணவர்களின் எதிரில் நின்றிருந்தான் மருதன். அதனைக் கண்ட ஆசிரியர், "மருதா! டார்வின் புத்தகத்தைப்

8th_Value Education Module.indd 15 31-03-2026 14:34:27

படித்து நீ என்ன அறிந்து கொண்டாய் என்பதை அனைவருக்கும் சுருக்கமாகக் கூறு கேட்போம்" என்றார். மருதன் கூறத் தொடங்கினான்.

"சார்லஸ் டார்வின் ஒரு புகழ்பெற்ற இயற்கை ஆர்வலர் மற்றும் உயிரியலாளர் ஆவார். இவர் பரிணாம வளர்ச்சியின் அறிவியல் கோட்பாட்டைக் கண்டுபிடித்ததனால் மிகவும் பிரபலமானவர். குறிப்பாக இயற்கைத் தேர்வு (Natural Selection) மூலம் உயிரினங்கள் எவ்வாறு காலப்போக்கில் மாறுகின்றன என்பதை இவர் விளக்கினார். டார்வினின் மிக முக்கியமான நூல் "உயிரினங்களின் தோற்றம்" (The Origin of Species), 1859இல் வெளியிடப்பட்டது. இந்தப் புத்தகம் அறிவியல் உலகில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியது. உயிரியலைப் பற்றிய நமது புரிதலை மேம்படுத்தியது.

"உயிரினங்களின் தோற்றம்" எனும் நூல் வெளியிடப்பட்டபோது பெரும் சர்ச்சை ஏற்பட்டது. ஏனெனில் அந்நூலில், கடவுள்தான் அனைத்து உயிரினங்களையும் படைத்தார் என்ற அப்போதைய நம்பிக்கைக்கு எதிராக இருந்தது. இருப்பினும், அறிவியல் சமூகத்தில் இந்த நூல் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.



இந்நூல் நவீன உயிரியலின் அடிப்படையாக அமைந்தது. டார்வினின் கோட்பாடுகள் உயிரியல், மரபியல், சூழலியல் மற்றும் தொல்லியல் போன்ற பல்வேறு துறைகளில் நமது புரிதலை ஆழமாக மாற்றியுள்ளன. மாணவர்கள் அனைவரும் கட்டாயம் படிக்கவேண்டிய புத்தகம் இது" என்று முடித்தான் அம்மாணவன்.

"உங்களது அறிவை விரிவாக்கும் பணியைச் சிறப்பாகச் செய்யும் புத்தகங்களைத் துணைகொள்ளுங்கள். வானம் வசப்படும்" என்று முடித்தார் ஆசிரியர்.

8th_Value Education Module.indd 16 31-03-2026 14:34:27

- புத்தக வாசிப்பால் ஏற்படும் நன்மைகள்
- கவனம் அதிகரிக்கும்
- கற்பனைத் திறன் அதிகரிக்கும்
- சிந்தனைகள் கூர்மையாகும்
- மொழித்திறன் மேம்படும்
- நினைவாற்றல் மேம்படும்
- மன அழுத்தம் குறையும்
- சிறந்த பொழுதுபோக்கு
- சமூகத் திறன்கள் மேம்படும்



அறிவைப் பெருக்குவதில் புத்தகங்கள், இணையம், அச்சு, சமூகம் மற்றும் ஊடகங்களின் தாக்கம் என்ன?



தமிழ் நூல்களை வாசிக்கும்போது, மொழி நம்மைத் தமிழ் மரபுடன் எப்படி இணைக்கிறது?



பின்வருவன குறித்தத் தகவல்களைச் சேகரிக்க

1. வேற்றுக் கிரகத்தில் வாழ்வது சாத்தியமா?
2. இணையம் எப்படி உலகை மாற்றியுள்ளது?

விழுமியங்கள்

- ஆர்வம்
- அறிவைத் தேடுதல்
- உலகளாவிய உண்மை
- விசாரணை மனப்பான்மை

வாழ்வியல் திறன்கள்

- படைப்புச்சிந்தனை
- பயனுள்ள தகவல் தொடர்பு
- கூர் சிந்தனை

நீர் அளவே ஆகுமாம் நீர் ஆம்பல் தான்கற்ற
நூல் அளவே ஆகுமாம் நுண் அறிவு – ஔவையார், மூதுரை

8th_Value Education Module.indd 17 31-03-2026 14:34:27

6 உழைப்புக்கு உரிய மரியாதை

"உழைப்பே உயர்வு தரும்"

உலகம் இயங்குவதற்கும், நாம் இன்று அனுபவிக்கும் பல வசதிகள் உருவாவதற்கும் எண்ணற்றோரின் அயராத உடல் உழைப்பே காரணம். உடல் உழைப்பு என்பது வெறும் வேலை மட்டுமன்று; அது ஒருவரின் வாழ்வாதாரம்; சமூகத்தின் வளர்ச்சிக்கு முக்கியப் பங்காற்றும் சிறந்த ஆற்றல்.



அன்பரசன் ஒரு புதிய வீடு கட்டத் தொடங்கியிருந்தார். ஒருநாள், அவர் சோகமே உருவாக அமர்ந்திருந்தார். இதனைக் கண்ட அவர் மனைவி ரம்யா அன்பரசனிடம் சென்று, "ஏங்க, எதுக்கு சோகமா இருக்கீங்க?" என்று விசாரித்தாள். அதற்கு அவர் "நமது வீட்டிற்கு வரும் தெரு குறுகலாக உள்ளது. கட்டுமானப் பொருள்களைத் தெரு முனையில்தான் இறக்கி வைப்பார்களாம். அதனை இங்கே எப்படிக் கொண்டுவருவது? வீடு கட்டும் வேலை செய்பவர்களோ குறைவாகத்தான் உள்ளனர். உரிய காலத்தில் கட்டி முடிக்க முடியுமா? எனத் தெரியவில்லை" என்றார் அன்பரசன்.



உடனே ரம்யா, "கவலைய விடுங்க. நாம ஓய்வா இருக்குற நேரத்துல கொஞ்சம் கொஞ்சமாகப் பொருள்களைக் கொண்டு வந்துசேர்ப்போம்"என்றாள்.அதன்படியே தங்களால் முடிந்த அளவு கட்டுமானப் பொருள்களைச் சுமந்து வந்து சேர்த்தனர்.இதைப்பார்த்தவேலையாள்கள்"நாங்களேபார்த்துக் கொள்கிறோம்,உரியநேரத்தில்முடித்தும்கொடுப்போம்"என்று உறுதி கூறிவிட்டு வீடு கட்டுவதில் மும்முரமாய் இறங்கினர். அன்பரசனும் ரம்யாவும் அவர்களுடன் இணைந்து கடும் வெயிலையும் பாராமல் கட்டுமானப் பணியைச் செய்தனர்.



உரிய நேரத்தில் வீட்டைக் கட்டி முடித்தனர். சரியான நேரத்தில் பணிகள் முடிவடைந்ததால் அன்பரசன் மகிழ்ச்சி அடைந்தார். புதுமனை புகுவிழா அழைப்பிதழ்

8th_Value Education Module.indd 18 31-03-2026 14:34:27



தயார் செய்து முதலில் வீட்டைக் கட்டியவர்களுக்குக் கொடுத்தார். அழைப்பிதழைப் பார்த்து அவர்கள் மிகவும் நெகழ்ச்சி அடைந்தனர். ஏனெனில், அழைப்பிதழில் அவர்களின் பெயர்களையும் அச்சிட்டிருந்தார் அன்பரசன்.மேலும்,அவர்களுக்குப்புத்தாடைகளையும் சிறப்புப் பரிசுகளையும் வழங்கி, விழாவிற்கு வரும்படி அழைப்பு விடுத்தார் அன்பரசன்.

கடினமான வேலைகள் செய்யும் சமூகப் பணியாளர்களுக்கு நீங்கள் எப்படி உதவுவீர்கள்?

கட்டுமான வேலை போன்ற கடின உழைப்பில் ஈடுபடுபவர்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகள்

தொழிலாளர்	செயல்பாடுகள்	பாதுகாப்பு நடவடிக்கைகள்
விவசாயி		
கட்டுமானப் பணியாளர்		
சாலைப் பணியாளர்		
துப்புரவுப் பணியாளர்		

உடல் உழைப்பில் ஈடுபடும் உங்களுக்கு அறிமுகமான ஒருவரை (வாகன ஓட்டுநர், துப்புரவுப் பணியாளர், கட்டுமானத் தொழிலாளி, விவசாயி) அணுகி அவரின் பணி, எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அனுபவங்கள் குறித்து நேர்காணலை நடத்துக.

விழுமியங்கள்

- மரியாதை கொடுத்தல்
- நன்றி உணர்வு
- பொறுமை
- சமமாக நடத்துதல்
- பணிவு காட்டுதல்
- கண்ணியமாக நடத்துதல்
- விடாமுயற்சி

வாழ்வியல் திறன்கள்

- பிறர் நிலையில் தன்னை வைத்துப் பார்த்தல்
- நல்லுறவை மேம்படுத்துதல்

கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை?
பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்குலத்தைப்
போய் எடுக்க அடக்கியமூச் செவரின் மூச்சு? **– பாரதிதாசன்**

8th_Value Education Module.indd 19 31-03-2026 14:34:27

7 குழந்தை உரிமை

"குழந்தைகளுக்கான கல்வியை அளிப்போம்"

கற்றது கையளவு; கல்லாதது உலகளவு என்ற வாசகம் உணர்த்தும் கல்வியின் முக்கியத்துவத்தை நாம் அறிவோம். நமது அரசியலமைப்பானது 6–14 வயதுவரை உள்ள குழந்தைகளுக்கு "இலவச மற்றும் கட்டாயக் கல்வி" என்பதை உறுதி செய்துள்ளது. அதனை மீறுவோரைத் தண்டனைக்குள்ளாக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

வகுப்பில் வழக்கமான உற்சாகத்தோடு வகுப்பாசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அப்போது 6–14 வயதுவரை உள்ள அனைவருக்கும் இலவச மற்றும் கட்டாயக்கல்வி அவசியம் என்பதை நமது அரசியலமைப்பு உறுதி செய்துள்ளதை விளக்கினார்.



பள்ளியிலிருந்து வீட்டிற்கு வந்தான் இனியன். தனக்காக அம்மா, வைத்திருந்த சிற்றுண்டியைச் சாப்பிட்டுக்கொண்டு இருந்தபோது தனது மிதிவண்டியைப் பழுது பார்த்த கடையில் கவலையுடன் வேலை செய்துகொண்டிருந்த சிறுவனின் முகம் நினைவிற்கு வந்தது. கவலையுடன் இருந்த அச்சிறுவன் செய்த ஏதோ ஒரு சிறு தவறுக்காக முதலாளி அவனை அடித்தது கண்முன்னே காட்சியாக விரிந்தது. மறுநாள் தன் ஆசிரியரிடம் தான் பார்த்த அந்த நிகழ்வினைக் கூறி அச்சிறுவனுக்கு எவ்வகையிலாவது நம்மால் உதவ முடியுமா? என்று கேட்டான். ஆசிரியர், பள்ளி முடிந்ததும் தான் அந்தக் கடைக்குச் சென்று பார்ப்பதாகக் கூறினார்.



8th_Value Education Module.indd 20 31-03-2026 14:34:28



சில நாள்கள் கழித்து செல்வம் என்ற புதிய மாணவன் இனியனின் வகுப்பில் புதிதாகச் சேர்ந்தான்.அவனை எங்கோ பார்த்ததுபோல் இனியனுக்குத் தோன்றியது.ஆனால்,நினைவுக்கு வரவில்லை. பிற்பகல் வகுப்பாசிரியர் வகுப்புக்கு வந்தபோதுதான் விவரம் புரிந்தது. அது வேறு யாருமன்று! இனியன் மிதிவண்டியைப் பழுதுபார்க்கும் கடையில் சென்ற வாரம் பார்த்த சிறுவன்தான் செல்வம். அம்மாணவனைப் பிற மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தினார் ஆசிரியர். இடைவேளையில் செல்வத்துடன் பேசிய வகுப்பு மாணவர்கள், "நீ ஏன் இதுநாள் வரை பள்ளிக்கு வரவில்லை" எனக் கேட்டனர். அதற்கு செல்வம் குடும்பச்சூழலால் கடைக்கு வேலைக்குச் சென்றதாகக் கூறினான்". மேலும் அவன் "குழந்தைகள் வேலைக்குச் செல்வது குற்றம் என்பதை அவனது பெற்றோர்களிடமும் கடைக்காரரிடமும் நம் ஆசிரியர் விளக்கிக் கூறினார்" என்றான்.

முதலில் ஏற்க மறுத்த கடைக்காரர், அக்குற்றம் தண்டனைக்குரியது என்று ஆசிரியர் கூறியதும் அமைதியாகிவிட்டார். என் பெற்றோர்களிடம் எத்தகைய சூழலிலும் கல்வியே நம்மைக் காப்பாற்றும் என்று ஆசிரியர் கூறினார். மேலும், கல்விக்கான உணவு, உடை, பாடநூல்கள் என அனைத்தையும் அரசாங்கமே வழங்குவதால் படிப்பதற்கு எந்தச் செலவும் ஆகாது என்பதைத் தெளிவுபடுத்தி என்னைப் பள்ளியில் சேர்ப்பதாகக் கூறினார். அதுமட்டுமன்று! என்னை இந்தப் பள்ளியில் சேர்க்க முன்னெடுப்பு செய்தது நமது வகுப்பு மாணவன் இனியன்தான் என்று ஆசிரியர் கூறினார். உனக்கு எனது நன்றி இனியா!" என்றான் செல்வம். உடனே, மாணவர்கள் அனைவரும் கைகளைத் தட்டி இனியனின் செயலைப் பாராட்டினர். அனைவரும் செல்வத்திற்கு வேண்டிய உதவிகளைத் தாங்களும் செய்வதாகக் கூறினர்.



8th_Value Education Module.indd 21 31-03-2026 14:34:28



குழந்தைத் தொழிலாளர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள்.

குழந்தைகளுக்கென அரசு அறிவித்துள்ள உதவி எண்ணை எந்தச் சூழலில் பயன்படுத்துவாய்?

குழந்தைப் பாதுகாப்புச் சட்டங்கள் குறித்துத் தகவல் திரட்டுக

விழுமியங்கள்

- பிறரைக் கருத்தில் கொள்ளுதல்
- மனிதநேயம்
- பிறர் மீது அக்கறை கொள்ளுதல்
- சுயகட்டுப்பாடு

வாழ்வியல் திறன்கள்

- பிறர் நிலையில் தன்னை வைத்துப் பார்த்தல்
- தன்னையறிதல்
- பிரச்சினைக்குத் தீர்வு காணுதல்
- முடிவெடுத்தல்

செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது **– குறள் (101)**

8th_Value Education Module.indd 22 31-03-2026 14:34:28

8 சிந்தனை – செயல் – வெற்றி

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து
அதனை அவன்கண் விடல் – குறள் (517)

வாழ்க்கை, தொடர்ச்சியான முடிவுகளை எடுக்கும் பயணம். நாம் ஒவ்வொருவரும், நாள்தோறும் எண்ணற்ற சவால்களையும் வாய்ப்புகளையும் சந்திக்கிறோம். இந்தச் சூழ்நிலைகளில் நாம் எப்படி நடந்துகொள்கிறோம், என்ன முடிவுகளை எடுக்கிறோம் என்பது நம்மை வடிவமைக்கிறது. குழந்தைப் பருவத்திலிருந்தேமுடிவெடுக்கும்திறனை அனைவரும்வளர்த்துக்கொள்வதேசாலச் சிறந்தது.

கண்மணி தன் பெற்றோர்களுடன் கிராமத்தில் வாழ்ந்து வந்தாள். ஒருநாள், அவளது தந்தை மூன்று பாத்திரங்களில் தண்ணீரை ஊற்றி ஒரு பாத்திரத்தில் உருளைக் கிழங்குகளையும், இரண்டாவது பாத்திரத்தில் முட்டைகளையும் மூன்றாவது பாத்திரத்தில் சிறிதளவு தேயிலையையும் போட்டுக் கொதிக்கவைத்தார். கண்மணியை அழைத்து,கொதிக்கும் பாத்திரங்களை சற்று நேரம் கவனிக்குமாறு அறிவுறுத்தினார். கண்மணி பாத்திரத்தில் தண்ணீர் கொதிப்பதைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.



8th_Value Education Module.indd 23 31-03-2026 14:34:29

சிறிது நேரத்திற்குப் பிறகு, அவர் கண்மணியை நோக்கி "இப்போது இந்த உருளைக்கிழங்கையும் முட்டையையும் தொட்டுப்பார். தேயிலைத் தண்ணீரை வடிகட்டிப் பார்." என்றார்.

கண்மணி அவ்வாறே செய்தாள். ஆனாலும் அவளுக்கு இந்தச் செயலின் நோக்கம் புரியவில்லை. அப்போது அவளது தந்தை "இந்த மூன்று பொருள்களும் தண்ணீரில் கொதிக்கும் முன்பு இருந்த தன்மையிலிருந்து மாறியுள்ளன. கடினமாக இருந்த உருளைக்கிழங்கு மிருதுவாகிவிட்டது. திரவநிலையில் இருந்த முட்டையின் உட்பகுதி கடினமாகிவிட்டது. திடப்பொருளாக இருந்த தேயிலை, தண்ணீரோடு கலந்து தண்ணீரின் வண்ணத்தையும், ருசியையும் முழுமையாக மாற்றியுள்ளது" என்றார்.

கண்மணியின் தந்தை இந்தச் சோதனையின் வாயிலாக மூன்று முக்கியமான கருத்துகளை அவளுக்குப் புரிய வைத்தார்.

உருளைக்கிழங்கு: தொடக்கத்தில் கடினமாக இருந்தாலும், கொதிக்கும் நீரில் மிருதுவாகிறது. வாழ்க்கைப் பிரச்சினைகள் சிலரைத் துவளச் செய்து, அவர்களின் வலிமையைக் குறைத்து, அவர்களை மென்மையாக்கிவிடும்.

முட்டை: தொடக்கத்தில் திரவ நிலையில் இருந்தாலும், கொதிக்கும் நீரில் கடினமாக மாறுகிறது. இதுபோல், பிரச்சினைகள் சிலரை இன்னும் கடினமாக்கி, உணர்வற்றவர்களாக மாற்றக்கூடும்.

தேயிலை: திடப்பொருளாக இருந்த தேயிலை, கொதிக்கும் நீரில் முழுவதுமாக கலந்து, நீரின் நிறத்தையும் சுவையையும் முழுவதுமாக மாற்றிவிடுகிறது. சவால்களை எதிர்கொள்ளும்போது சிலர் சூழ்நிலையையே தங்களுக்குச் சாதகமாக மாற்றிக்கொள்ளும் திறனைக் கொண்டிருப்பார்கள்.

மேற்கண்டவற்றுள் "நீ எந்த வகை?" என்று கண்மணி என் தந்தை கேட்டது மிக ஆழமானது. நாம் ஒவ்வொருவரும் வாழ்க்கையின் சவால்களை எப்படி எதிர்கொள்கிறோம் என்பதை நமக்கு உணர்த்துவது.

உருளைக்கிழங்கு போல மென்மையானவர்களா? பிரச்சினைகளைக் கண்டு நாம் எளிதில் துவண்டுவிடுகிறோமா?

முட்டை போலக் கடினமாவர்களா? பிரச்சினைகள் நம்மை உணர்வற்றவராகவும், பிடிவாதக்காரராகவும் நம்மை மாற்றிவிடுகிறதா?

நாம் அல்லது தேயிலையைப் போலச் சூழ்நிலையையே மாற்றுபவரா? சவால்களை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி, மனஉறுதியோடு சூழ்நிலையை மாற்றி, வளர்ச்சி அடைகிறோமா?

இந்தக் கேள்வி நம் ஒவ்வொருவருக்கும் பொருந்தும். வாழ்க்கையில் நாம் சந்திக்கும் தடைகள், நம்மை எப்படி மாற்றுகின்றன என்பதை இக்கதை விளக்குகிறது.

8th_Value Education Module.indd 24 31-03-2026 14:34:29



உங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதில் முக்கியப் பங்காற்றுபவர்கள் குறித்து விவாதிக்க.



உங்களது நண்பர்கள் அல்லது குடும்பத்தினரின் விருப்பங்கள் நீங்கள் எடுக்கும் முடிவைப் பாதிக்கிறதா? உங்கள் சொந்த விருப்பங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது ஏன் ?



- உங்கள் நண்பர்கள் இரண்டு குழுக்களாகப் பிரிந்து மோதல்களில் ஈடுபடுகிறார்கள். இந்தச் சூழ்நிலையைச் சரி செய்ய நீங்கள் என்ன செய்வீர்கள்?
- நீங்கள் உங்கள் வாழ்வில் ஒரு சரியான முடிவை எடுத்த நேரத்தை விவரிக்கவும். அந்தச் சூழ்நிலையை நீங்கள் எவ்வாறு கையாண்டீர்கள்? என்பதையும் விவரிக்கவும்.
- நண்பர்கள் குழுவில் நீங்கள் அதிக முடிவுகளை எடுக்கிறீர்களா? அல்லது வேறொருவரின் வழிகாட்டுதலைப் பின்பற்றுகிறீர்களா? காரணத்துடன் பகிர்க.

விழுமியங்கள்

- தன்னம்பிக்கை
- பிறரைக் கருத்தில் கொள்ளுதல்
- தலைமைத்துவம்
- துணிவு
- குழு உணர்வு
- சுய ஊக்கம்
- தன்னேற்பு

வாழ்வியல் திறன்கள்

- பிறர் நிலையில் தன்னை வைத்துப் பார்த்தல்
- தன்னையறிதல்
- பிரச்சினைக்குத் தீர்வு காணுதல்
- முடிவெடுத்தல்

வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற **– குறள் (661)**

8th_Value Education Module.indd 25 31-03-2026 14:34:29

9 விழித்திரு!

"நன்மையும் தீமையும் இணையத்தில் உண்டு;
நன்மையைத் தேடுவோம் மனதில் கொண்டு."

இன்றைய கணினி யுகத்தில் இணையம் நமது வாழ்வின் இன்றியமையாத பகுதியாகிவிட்டது. ஆனால், இந்த வசதி வாய்ப்புகளுக்கு இடையே, இணையத்தைத் தவறாகப் பயன்படுத்தி மக்களை ஏமாற்றும் மோசடிக் கும்பல்களும் பெருகிவிட்டன.

எட்டாம் வகுப்பு படிக்கும் புகழ் எளிமையான மாணவன். ஆனால், அவனுடையசிந்தனைகள்அசாதாரணம். கணினித் தொழில்நுட்பங்களில் தனக்கென ஓர் ஆர்வத்தை வளர்த்துக் கொண்டவன். பள்ளிக்குப் போகும் வழியில் சாய்ந்த மரங்களைப் பார்த்தாலும் அவன் தனது கற்பனைக்குள் ரோபோக்களை வைத்து எப்படி மரங்களை நிமிர்த்தலாம் என்று





பிரம்மாண்டமாகக் கற்பனை செய்து பார்ப்பான். புதிய செயலியைக் கண்டுபிடித்து அனைவருக்கும் எளிமையாக கிடைக்க வழிவகைசெய்யவேண்டும்என்றவிருப்பத்துடன் தனது தேடலைத் தொடர்கிறான்.

புகழ் வளர்ந்து பெரியவனாகிறான். அவனுடைய இந்தத் தொழில்நுட்பக் கனவும் அவனைத் தொடர்ந்துகொண்டே இருந்தது. அதன் விளைவாக கல்லூரிப்படிப்பை முடித்து புதிதாகத் தொழில் தொடங்க வேண்டும் என்ற முனைப்புடன் வங்கி மேலாளரை அணுகி, கடனுதவி பெறுகிறான். புதிய செயலியைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் முழு

8th_Value Education Module.indd 26 31-03-2026 14:34:29



ஈடுபாட்டோடு செயல்பட்டுக்கொண்டிருந்த பொழுது, அலைபேசியில் ஓர் அழைப்பு வருகிறது. அதில் உங்களுக்கு ஒரு கோடி ரூபாய் பரிசு விழுந்துள்ளது என்று ஒருவர் கூறுகிறார். இந்தப் பரிசை நீங்கள் பெற வேண்டுமென்றால் உங்களுடைய பெயர், மின்னஞ்சல் முகவரி மற்றும் வங்கிக் கணக்கு எண் போன்ற விவரங்களைத் தர வேண்டும். சிறிது நேரத்தில் மீண்டும் உங்களை அழைத்துப் பெற்றுக் கொள்கிறேன் எனக் கூறி அழைப்புத் துண்டிக்கப்படுகிறது. உடனே மகிழ்ச்சியில் துள்ளினான் புகழ். நம்முடைய பணத்தேவையைப் பூர்த்தி செய்யவே இந்த வாய்ப்புக் கிடைத்துள்ளது என்று நினைத்தான்.

இருப்பினும் புகழின் மனதில் சிறு சந்தேகம் எழுந்தது. என்ன இது? திடீரென்று ஓர் அழைப்பு! யாரென்றே தெரியவில்லை? ஒரு கோடி ரூபாய் பரிசு வென்றதுள்ளதாகக் கூறுகிறார்களே. நான் இவ்வளவு தொகை பெறுவதற்கான முயற்சி எதுவும் மேற்கொள்ளவில்லையே,இதைநம்பலாமா!வேண்டாமா!என்றுசிந்திக்கஆரம்பித்தான் புகழ். தனது தொழில்நுட்ப அறிவைப் பயன்படுத்தி இணையக் குற்றங்கள் சார்ந்த தகவல்களைச் சேகரித்தான். மேலும், தன் ஆருயிர் நண்பன் திகழிடம் ஆலோசித்தான். திகழும் "இது ஒருவகை ஏமாற்று வேலை,கவனமாக இரு!"என்று எச்சரிக்கை செய்தான். அத்துடன் இத்தகைய இணையவழித் திருட்டுகள் எவ்வாறு நடக்கின்றன என்பன பற்றியும் விரிவாக எடுத்துக் கூறினான்.



நல்லவேளை! நாம் எந்தத் தகவலையும் பகிரவில்லை என்று உணர்ந்த புகழ், சிறிது நேரம் கழித்து வந்த அந்த அலைபேசி அழைப்பை எடுத்துத் தெளிவாகவும் திடமாகவும் தீர்க்கமான குரலில் மறுத்து "நீங்கள் செய்வது மோசடி" எனக்கூறி இணைப்பைத்துண்டித்தான்.பின்னர்ப் புதிய செயலியைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு உலகளாவிய சாதனை புரிந்து வாழ்வில் வெற்றி பெற்றான்.

8th_Value Education Module.indd 27 31-03-2026 14:34:29



தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாத்தல் (Protecting Personal Information): எதையும் வெளியிடாதீர்கள்: உங்கள் பெயர், முகவரி, தொலைபேசி எண், பள்ளியின் பெயர், பெற்றோர் வேலை விவரங்கள் போன்ற தனிப்பட்ட தகவல்களை ஆன்லைனில் யாருடனும் பகிர வேண்டாம்.புகைப்படங்களில் கவனம்: நீங்கள் வசிக்கும் வீடு, படிக்கும் கல்வி நிலையம் போன்றவற்றைக் காட்டக்கூடிய புகைப்படங்களைப் பதிவேற்றாதீர்கள்.



இணையம் மற்றும் தொலைபேசி வழியாக வரும் பரிசு அறிவிப்புகளும் அவற்றைக் கையாளும் முறைகளும்.



இணைய மோசடியின் பல்வேறு வகைகள் குறித்துச் சிந்திக்க.



இணையத் திருட்டு மற்றும் விழிப்புணர்வு சார்ந்த தகவல்களைச் சேகரித்து அறிவிப்புப் பலகையில் காட்சிப்படுத்துக.

விழுமியங்கள்

- சுய ஒழுங்கு
- சுயகட்டுப்பாடு
- சமூகப் பொறுப்புணர்வு
- விசாரணை மனப்பான்மை

வாழ்வியல் திறன்கள்

- பிரச்சினைக்குத் தீர்வு காணுதல்
- முடிவெடுத்தல்
- பயனுள்ள தகவல் தொடர்பு

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும் – குறள் (138)

8th_Value Education Module.indd 28 31-03-2026 14:34:30

10 கொடைச் சிந்தனை

"தர்மம் தலைகாக்கும்"

உலகில் மனிதன் சிறந்து விளங்குவதற்கு அவனது நற்குணங்களே அடித்தளம். இவற்றுள் தலையாயது தர்ம சிந்தனை. பிறரின் துயரங்களைப் போக்கி, அவர்களுக்கு உதவுவதே உண்மையான மனிதநேயம். ஆனால், சுயநலமும் பேராசையும் கொண்ட மனது, ஒருவனை இருளில் தள்ளி, இறுதியில் அழிவுக்கே இட்டுச் செல்லும்.

அது ஒரு பசுமையான வயல்களும், பூத்துக்குலுங்கும் சோலைகளும் நிறைந்த "பூஞ்சோலை" எனும் அழகிய கிராமம்.அக்கிராமமக்கள்கடினஉழைப்பாளிகள் என்றாலும், அவர்களில் பலர் தாங்கள் உண்டு, தங்கள் குடும்பம் உண்டு என்று எண்ணி வாழ்ந்தனர். பிறருக்கு எது நடந்தால் நமக்கென்ன? என்ற எண்ணமே அவர்களிடம் மேலோங்கியிருந்தது.



அதே கிராமத்தில், ஆயிஷா என்ற வயதான மூதாட்டி ஒருவர் வாழ்ந்து வந்தார். அவருக்குச் சொந்தமென்று யாரும் இல்லை. தன்னிடம் இருந்த நிலத்தையும், வீட்டையும் கூட,பல ஆண்டுகளுக்கு முன்னரே ஏழைகளுக்கும் ஆதரவற்றோருக்கும் தானமாக வழங்கிவிட்டார். பிறருக்கு உதவிசெய்து வாழ்வதையே தனது கொள்கையாகக் கொண்டிருந்தார்.

ஆயிஷா வீட்டுக்குப் பக்கத்து வீட்டில், செல்வநாதன் என்ற பணக்காரர் வசித்தார். அவருக்குப் பரந்த நிலங்களும், மிகப் பெரிய மாளிகையும் இருந்தன. ஆனால், அவர் மிகவும் கஞ்சத்தனம் உடையவர். தன்னிடம் இருப்பதை யாருடனும் பகிர்ந்துகொள்ள மாட்டார். கிராமத்தில் யார் கஷ்டப்பட்டாலும், "அது அவர்களின் தலைவிதி" என்று

8th_Value Education Module.indd 29 31-03-2026 14:34:30

சற்றும் கவலையின்றி ஒதுங்கிவிடுவார். ஆயிஷா மற்றவர்களுக்கு உதவுவதைப் பார்க்கும் போதெல்லாம், "இந்தக் கிழவிக்கு வேறு வேலையில்லை. தனக்காகச் சேமிக்காமல், மற்றவர்களுக்குக் கொடுத்து என்ன ஆகப்போகிறது?" என்று மனதுக்குள் நினைத்துக்கொண்டார்.



கோடைக்காலத்தில், பூஞ்சோலை கிராமத்தில் மிகக் கடுமையான பஞ்சம் ஏற்பட்டது. மழை பெய்யாததால், வயல்கள் கருகி, கிணறுகள் வறண்டு போயின. விளைச்சல் குறைந்து, மக்கள் உணவும், தண்ணீரும் இன்றிப் பெருந்துயரத்தில் ஆழ்ந்தனர். செல்வநாதனோ, தனது வீட்டுக் கிணற்றில் இருந்த தண்ணீரை யாருக்கும் கொடுக்காமல் பூட்டி வைத்துக்கொண்டார். தனது தானியக் கிடங்கில் இருந்து சிறு தானியத்தைக்கூட யாருக்கும் வழங்க மறுத்துவிட்டார். "இது எனது உழைப்பு; நான் ஏன் மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும்?" என்று சுயநலத்துடன் இருந்தார்.

ஆனால், ஆயிஷா அப்படியில்லை. அவளிடம் பெரிதாக எதுவும் இல்லை.

இருந்தபோதிலும், தனது குடிசையின் ஓரத்தில் இருந்த சிறிய கிணற்றில் கொஞ்சமாகத் தண்ணீர் இருந்தது. அந்தக் கிணற்று நீரை ஊர் மக்கள் அனைவரும் எடுத்துக்கொள்ள இன்முகத்துடன் அனுமதித்தார். அவரிடம் இருந்த சொற்ப தானியத்தைக்கூட, தினமும் கொஞ்சம் கொஞ்சமாகச் சமைத்து, பசியால் வாடிய குழந்தைகளுக்கு வழங்கினார். "நான் பட்டினி கிடந்தாலும் பரவாயில்லை, இந்தக் குழந்தைகள் பசியோடு இருக்கக் கூடாது" என்று மனிதநேயத்துடன் செயல்பட்டார்.



8th_Value Education Module.indd 30 31-03-2026 14:34:31

நாள்கள் செல்லச் செல்ல, பஞ்சம் மேலும் தீவிரமானது. செல்வநாதன், தனது கிணற்றில் தண்ணீர் குறைந்ததால், பூட்டியிருந்த கிணற்றின் அருகே சென்றார். அப்போது எதிர்பாராதவிதமாக, அங்கே இருந்த கிணற்றின் கைப்பிடிச் சுவர் சரிந்து, கிணற்றுக்குள் விழுந்தது. கிணற்றின் அடிப்பாகம் முழுவதும் கல்லால் மூடப்பட்டதால், அவரும் தண்ணீர் இல்லாமல் தவித்தார். மேலும், அவரது தானியக் கிடங்கில் பல காலமாகச் சேமிக்கப்பட்டிருந்த தானியங்கள் மக்கியும், எலிகளால் நாசம் செய்யப்பட்டும் பயனற்றுப் போயின. தனது சுயநலத்தால் செல்வநாதன் அனைத்தையும் இழந்தார்.



ஆனால், ஆயிஷாவின் கிணற்றில் தண்ணீர் சுரப்பது நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே சென்றது. அதில் அதிசயிக்கத்தக்க வகையில் தெளிவான, சுவையான தண்ணீர் பெருக்கெடுத்தது. இதைப் பார்த்த கிராம மக்கள் அனைவரும் வியப்பிலும், ஆச்சரியத்திலும் ஆழ்ந்தனர். ஆயிஷா சிறிதும் சலிக்காமல், கிடைத்த அந்த அரிய தண்ணீரையும், அவரிடம் எஞ்சியிருந்த மிகக் குறைந்த அளவு தானியத்தையும் கொண்டு, மற்றவர்களுக்குத் தொடர்ந்து உதவி செய்தார்.

சில நாள்கள் கழித்து, பக்கத்து நகரத்தில் இருந்து சிலர் ஆயிஷாவின் குடிசையை நோக்கி வந்தனர். அவர்கள் ஆயிஷாவை அணுகி, அவரிடம் உயர்தர தானிய மூட்டைகளைக் கொடுத்து ஆச்சரியப்படுத்தினர். "அம்மா, உங்களது தாராள மனதும், தர்ம சிந்தனையும் தான் எங்களை இந்தக் கிராமத்திற்கு வழிநடத்தி வந்தது. உங்கள் சேவை மனப்பான்மையைப் பற்றிக் கேள்விப்பட்டு, உங்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்திலேயே நாங்கள் இங்கு வந்தோம்" என்று கூறினர். இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த செல்வநாதன் தான் செய்த தவறுகளை உணர்ந்து, ஆயிஷாவிடம் சென்று மன்னிப்புக் கேட்டார். ஆயிஷா சிரித்தபடி, "கவலைப்படாதே மகனே. நீ மனம் திருந்தியதே எனக்கு மகிழ்ச்சி" என்று கூறி, அவருக்கும் உதவ முன்வந்தார்.

8th_Value Education Module.indd 31 31-03-2026 14:34:31

அன்று முதல், செல்வநாதனும் பிறருக்கு உதவத் தொடங்கினார். கிராம மக்கள் ஆயிஷாவைப் பின்பற்றி, சமூக சேவை செய்வதிலும், மற்றவர்கள் மீது அக்கறை கொள்வதிலும் ஆர்வம் காட்டத் தொடங்கினர். பூஞ்சோலை கிராமம் மீண்டும் செழித்தது, மக்கள் அனைவரின் மனத்திலும் அன்பும், அக்கறையும், ஒற்றுமையும் நிறைந்திருந்தது.



வறட்சி அல்லது பேரிடர்க் காலத்தில், இருப்பவர்கள், இல்லாதவர்களுக்கு உதவுவதன் முக்கியத்துவம் என்ன?



தனிப்பட்ட வளர்ச்சிக்கும், பேராசைக்கும் இடையே உள்ள வேறுபாடு என்ன?



மாணவர்கள் தங்கள் பள்ளியிலும் சுற்றுப்புறத்திலும் உள்ள பொதுச் சொத்துகளைப் (எ.கா, வகுப்பறைகள், விளையாட்டு மைதானம், நூலகம், பூங்கா) பட்டியலிட்டு, அவற்றை மேம்படுத்துவது பற்றி அறிக்கை தயாரிக்கலாம்.

விழுமியங்கள்

- பிறருக்கு உதவுதல்
- சமூகப் பொறுப்புணர்வு
- பிறரை மீது அக்கறை கொள்ளுதல்

வாழ்வியல் திறன்கள்

- பிரச்சினைக்குத் தீர்வு காணுதல்
- நல்லுறவை மேம்படுத்துதல்

பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது **– குறள் (103)**

8th_Value Education Module.indd 32 31-03-2026 14:34:31



- மின்மினிப்பூச்சிகள் சுத்தமான நீர்நிலைகள் மற்றும் ஈரப்பதமான, மாசுபடாத சூழல்களில் வாழக்கூடியவை.
- இவை புழுக்கள், நத்தைகள் மற்றும் பிற தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை உணவாக உட்கொள்கின்றன.
- இவை உருவாக்கும் வெப்பம் இல்லாத ஒளிக்குக் காரணம் "லூசிஃபெரேஸ்" (Luciferase) எனப்படும் நொதி,
- நீர்மாசுபாடு,ஒளிமாசுபாடு,பூச்சிக்கொல்லிகளின் பயன்பாடு ஆகியவை இவற்றை வெகுவாகப் பாதிக்கின்றன

8th_Value Education Module.indd 33 31-03-2026 14:34:32

வாழ்க்கைத் திறன்கள் மற்றும் விழுமியக் கல்வி – வகுப்பு 8

ஆக்கம்

வல்லுநர்

முனைவர் மு.லெட்சுமணன்,
மேனாள் துறைத்தலைவர் மற்றும் இணைப்பேராசிரியர், (ப.நி.,),
வரலாற்றுத்துறை, மாநிலக் கல்லூரி, சென்னை.–05.

ஒருங்கிணைப்பாளர்கள்

திருமதி ஏ.ஜெகதீஸ்வரி,
துணை இயக்குநர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை – 6.

முனைவர் சீ. பிரபு,
துணை இயக்குநர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை – 6.

மேலாய்வு

திருமதி.அ.ஜெபா
துணை இயக்குநர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை – 6.

முனைவர் நா. வளர்மதி,
முதுநிலை விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
இராணிப்பேட்டை ,வேலூர் மாவட்டம்

உருவாக்கக் குழுவினர்

செல்வி. சு.அரும்பு மொழி
முதுநிலை விரிவுரையாளர்
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
ராணிப்பேட்டை

திருமதி. ப. சிலம்பரசி
முதுநிலை விரிவுரையாளர்
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
தருமபுரி மாவட்டம்.

திருமதி ப. கலைச்செல்வி,
முதுநிலை விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
களியாம்பூண்டி,காஞ்சிபுரம் மாவட்டம்.

திருமதி பு.கமலி,
முதுநிலை விரிவுரையாளர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை – 6.

திரு. ரெ.சுப்பிரமணியன்,
முதுகலை ஆசிரியர்,
அரசு முன்மாதிரி மேல்நிலைப்பள்ளி, நந்தனம், சென்னை – 6.

திரு.இரா. ராஜசேகர்,
முதுகலை ஆசிரியர்,
அரசு மேல்நிலைப்பள்ளி, ந.சுப்பையாபுரம், விருதுநகர்.

திரு.தே.சிவகணேஷ்,
முதுகலை ஆசிரியர்,
அரசு மேல்நிலைப்பள்ளி, மிட்டூர் திருப்பத்தூர்.

முனைவர் க. சுரேஷ்,
பட்டதாரி ஆசிரியர்,
குமார இராஜா முத்தையா மேல்நிலைப்பள்ளி, அடையாறு

முனைவர். இரா . இராமசாமி,
தலைமையாசிரியர்,
திருப்புரம்பியம், தஞ்சாவூர் மாவட்டம்.

திரு.செ.கந்தன்,
முதுகலை ஆசிரியர்,
அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, பெருந்துறை,
ஈரோடு மாவட்டம்.

திரு. பா. முத்துப்பாண்டி,
முதுகலை ஆசிரியர்,
அரசு மேல்நிலைப்பள்ளி, பள்ளப்பட்டி,திண்டுக்கல் மாவட்டம்

முனைவர் த. சாவித்திரி,
முதுகலைஆசிரியை
அரசு மேல்நிலைப் பள்ளி, முத்தூர், திருப்பூர்மாவட்டம்.

திருமதி எம்.கவிதா,
முதுகலை ஆசிரியர்
அரசு மேல்நிலைப்பள்ளி, வீராணம், சேலம்.

முனைவர்.சு. கீதாகுமாரி,
இடைநிலை ஆசிரியர்,
அரசுபெண்கள் மேல்நிலைப்பள்ளி, செங்கல்பட்டு.

திரு.பி.பிரபாகர்,
இடைநிலை ஆசிரியர்,
நகரவை ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, அம்மாப்பேட்டை, சேலம்.

திரு.கே.முனுசாமி,
பட்டதாரி ஆசிரியர்,
அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, ஆத்தூர்.

திரு.எஸ்.மாரியப்பன்,
பட்டதாரி ஆசிரியர்,
அரசு மேல்நிலைப்பள்ளி, ஆடுதுறை, தஞ்சாவூர் மாவட்டம்.

திரு.பா. பாலசுப்ரமணியபாரதி,
ஜே.ஆர்.சி. கன்வினர்,
அரசு மேல்நிலைப்பள்ளி, பெரியதச்சூர், திண்டிவனம், விழுப்புரம்.

பக்க வடிவமைப்பு & ஓவியம்

திரு. ஜாண்ஸ்மித் வே.சா.

திரு. மதன் ராஜ். ர

திரு. மாணிக்கராஜ் பிரபாகர். ம. ஆ

திரு. கி. வீரவேல் முருகன், ஓவிய ஆசிரியர்,
அ.ஆ.தி.ந.மே.ப., வண்டுராயன்பட்டு, கடலூர்.

திரு. டி. துரை, ஓவிய ஆசிரியர்,
ஊ.ஒ.ந.நி.ப., பாரிவாக்கம், திருவள்ளூர்.

வடிவமைப்புக் குழு மேற்பார்வை

திரு. ம. அமல்ராஜ்,
பட்டதாரி ஆசிரியர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை 6.

இந்நூல் 80 ஜி.எஸ்.எம் எலிகண்ட் மேப்லித்தோ தாளில்
அச்சிடப்பட்டுள்ளது.

ஆப்செட் முறையில் அச்சிட்டோர்:

8th_Value Education Module.indd 34 31-03-2026 14:34:32